www.freetnbooks.com

V9SS

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 9

காலம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I

I. **சரியான விடையைத் தேர்ந்தெடு:** **14×1=14**

1) மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது
அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) பெருங்குரங்கு

2) சுமேரியரின் எழுத்துமுறை ............ ஆகும்.
அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக்
இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம்

3) மும்மணிகள் (திரிரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் ............
அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) லாவோட்சே ஈ) கன்ஃபூசியஸ்

4) கிருஷ்ணதேவராயர் ............ன் சமகாலத்தவர்.
அ) பாபர் ஆ) ஹீமாயூன் இ) அக்பர் ஈ) ஷெர்ஷா

5) 'கான்பீட்' என்ற நூல் ............ ஆல் எழுதப்பட்டது.
அ) வால்டேர் ஆ) ரூசோ இ) மான்டெஸ்கியூ ஈ) டாண்டன்

6) புவி அதிர்வு உருவாகும் புள்ளி ............ என்று அழைக்கப்படுகிறது.
அ) மேல் மையம் ஆ) கீழ் மையம்
இ) புவி அதிர்வு அலைகள் ஈ) புவி அதிர்வின் தீவிரம்

7) ............ புயலின் கண் என்று அழைக்கப்படுகிறது.
அ) அழுத்தம் ஆ) காற்று இ) சூறாவளி ஈ) பனி

8) புவியின் குளிர்ச்சியான பல்லுயிர்த்தொகுதி
அ) தூந்திரா ஆ) டைகா இ) பாலைவனம் ஈ) பெருங்கடல்கள்

9) ஒரு நிலவரைபடத்தின் கருத்து (அல்லது) நோக்கத்தைக் குறிப்பிடுவது
அ) தலைப்பு ஆ) அளவை இ) திசைகள் ஈ) நிலவரைபடக் குறிப்பு

10) முழு அதிகாரத்துடன் கொண்ட ஒரு அரசாங்க முறை
அ) சிறுகுழு ஆட்சி ஆ) மத குருமார்களின் ஆட்சி
இ) மக்களாட்சி ஈ) தனிநபராட்சி

11) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவலைப் பெறுவதற்கான காலவரம்பு ............
அ) 20 நாட்கள் ஆ) 25 நாட்கள் இ) 30 நாட்கள் ஈ) 35 நாட்கள்

12) ............ காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.
அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

13) **கூற்று (A)** : ஒழுங்குபடுத்தப்படாத துறையின் பொருளாதார பண்பு என்பது வீட்டினுள் உற்பத்தி நடவடிக்கை மற்றும் சிறுதொழில் செய்வதாகும்.
**காரணம் (R)** : இங்கு குறைவான ஊதியமும் மற்றும் வேலைகள் முறையாக வழங்கப்படுவதில்லை.
அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, கூற்றுக்கான காரணம் சரி.
ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, கூற்றுக்கான காரணம் தவறு.
இ) கூற்று (A) சரி, காரணம் (R) தவறு.
ஈ) கூற்று (A) தவறு, காரணம் (R) சரி.

14) பொருந்தாத ஒன்றை கண்டறி.
அ) சூரிய ஆற்றல் ஆ) காற்று ஆற்றல்
இ) காகிதம் ஈ) இயற்கை வாயு

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



## பகுதி - II

**II.** சுருக்கமான விடையளி: (ஏதேனும் 10) **10×2=20**

(கட்டாய வினா எண் - 28)

15) ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் - விவரி.
16) புத்த சமயத்தைப் பரப்ப அசோகர் மேற்கொண்ட முயற்சிகள் என்னென்ன?
17) சீனப் பெருஞ்சுவர் பற்றி குறிப்பு வரைக.
18) 'கொலம்பியாப் பரிமாற்றம்' என்றால் என்ன?
19) 'பாஸ்டன் தேநீர் விருந்தின்' முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
20) புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
21) நீரியல் சுழற்சி என்றால் என்ன?
22) மக்கள் அடர்த்தி என்றால் என்ன?
23) நிலவரைபடம் என்றால் என்ன? அதன் கூறுகள் யாவை?
24) நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சி வேறுபடுத்துக.
25) குழந்தைகளுக்கான உரிமைகளாக ஐ.நா. சபை அறிவித்துள்ளவை யாவை?
26) கிராம ஊராட்சிகளின் முக்கிய பணிகள் யாவை?
27) சூரிய சக்தி என்றால் என்ன?
28) குழந்தைகளையும் 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களையும் ஏன் பணிக் குழுக்களாக கருதக்கூடாது?

## பகுதி - III

**III.** எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: **10×5=50**

(கட்டாய வினா எண் - 42)

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
   i) ............... ஐரோப்பாவின் மிக நேர்த்தியான கட்டடம்.
   ii) ............... காலம் தமிழக வரலாற்றின் உன்னத ஒலி பொருந்தியக் காலம்.
   iii) ............... மிகப்பரந்த் புவிச்சூழ்நிலை மண்டலத்தை ............... என்கிறோம்.
   iv) உலகளாவிய மனித உரிமை பிரகடனம் ............... பிரிவுகளைக் கொண்டுள்ளது.
   v) இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் அச்சகம் தொடங்கப்பட்ட இடம் ...............
30) சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
31) கன்பூசியஸின் ஐந்து முக்கியமான கோட்பாடுகளை விளக்கி கூறு.
32) 1789 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிரெஞ்சு தத்துவஞானிகளின் பங்களிப்பினை விளக்கவும்.
33) செவ்வியல் காலத்தில் இந்தியாவின் நிலை குறித்து எழுதுக.
34) எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை?
35) கடல் வளங்கள் மனிதகுலத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை?
36) உலக அமைவிடத் தொகுதியின் (GPS) பயன்களை விவரி.
37) மக்களாட்சியின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.
38) உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள் மற்றும் சவால்கள் யாவை?
39) பொதுத்துறையையும், தனியார் துறையையும் வேறுபடுத்துக.
40) பணத்தின் செயல்பாடுகளைப் பட்டியலிடுக.
41) தமிழகத்தின் நீர் ஆதாரம் பற்றி ஆய்வு செய்க.
42) **கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:**
   (i) மதுரை (ii) கோழிக்கோடு (iii) அரிக்கமேடு
   (iv) தொண்டி (v) அழகன் குளம்

## பகுதி - IV

**2×8=16**

43) **கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி:**
   அ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் நம் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது?

   **(அல்லது)**

   ஆ) தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னதக் காலம் - விளக்கவும்.
44) **உலக வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்:**
   (i) ஹவாய் (ii) பசிபிக் நெருப்பு வளையம்
   (iii) சகாரா பாலைவனம் (iv) பசிபிக்கடல்
   (v) அமேசான் படுகை (vi) தூந்திர பல்லுயிர்த்தொகுதி
   (vii) டென்மார்க் (viii) பிரிட்டன்

------------

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner